**தலைப்பு 145 - சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு **145 -** அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடங்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 08 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புகள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 6,806.53 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 1,937.53 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 4,869.00 மில்லியன் அல்லது 71.53 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 830.11 | 822.62 | 7.49 | 0.90 |
| மூலதன | 5,976.42 | 1,114.91 | 4,861.51 | 81.34 |
| **மொத்தம்** | 6,806.53 | 1,937.53 | 4,869.00 | **71.53** |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய விடய இலக்கம் 14501 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்க்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 11.12 | 2.91 | 2.00 | 2.90 | 37.50 | 8.58 |

## 2.3 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சின் கீழான 7002/0000/00/0377/0014/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 8,088 ஆக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சின் கீழுள்ள 03 வைப்புக் கணக்குகளிள் மீதிகளின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கூட்டுத்தொகை ரூபா 5,767,928 ஆக இருந்தது. விபரம் பின்வருமாறு.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா |
| 6000/0000/00/0001/0079/000 | 35,269 |
| 6000/0000/00/0016/0055/000 | 5,692,334 |
| 6000/0000/00/0018/0066/000 | 40,325 |
| மொத்தம் | **5,767,928** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை**

அமைச்சினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | கணனி, உபபாகங்கள் மற்றும் கணனி மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்க வில்லை |
| (ii) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்க வில்லை |
| (iii) | அடியிதழ்சேர் புத்தகப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 | பேணப்பட்டிருக்க வில்லை |
| (iv) | நிலையானச் சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. |
| (v) | சில்லறைக் காசேடு | நிதிப்பிரமாணம் 446 | நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. |
| (vi) | வாகன சம்பவக்குறிப்பு புத்தகம் | நிதிப்பிரமாணம் 1645(அ) | நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. |

**3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதிலளித்தல்**

மீளாய்வாண்டின் போது அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட 06 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2016 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐயவினாக்களுக்குரியதாக கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 70,136,245 ஆக காணப்பட்டது.

**3.3 செயல்நிமித்த உப கட்டுநிதி**

2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக பதவிநிலைத் தரமற்ற 05 உத்தியோகத்தர்களுக்கு 45 சந்தர்ப்பங்களின் போது ரூபா 774,855 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி விடுவிக்கப்பட்டிருந்தது.

**3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

விடய இலக்கம் 14501 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 376,166 ஆக காணப்பட்டதுடன் அந்த நிலுவை மீதி 1 முதல் 5 வருடங்கள் வரையான காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன், அந்த நிலுவை மீதியினை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

(ஆ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ஐந்து உத்தியோகத்தர்களின் நிலுவை கடன் மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 376,166 இனை அறவிடுவதற்கு தவறியிருந்தது. இதனிடையே சேவையை விட்டுச்சென்ற இரு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 221,066 கூட்டுத்தொகையான கடன் மீதியும், வேலை நீக்கம் செய்யப்பட்ட இரு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 155,100 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

**3.5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

---

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், இந்த அறிக்கை 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

**3.6 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

---

அமைச்சினால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான தீர்க்கப்படாத பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 1,816,009 ஆக காணப்பட்டது.

**3.7 இணக்கமின்மைகள்**

---

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

---

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்களின் விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | |
| (i) | நிதிப்பிரமாணம் 447(4) மற்றும் (5) | 1,816,009 | ஒதுக்கீடு அங்கீகரிக்கப்பட்ட செலவினப் பேரேட்டில் செலவினங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 94(1) | 613,436 | 11 செலவின விடயங்களில் சேமிப்புகளை விஞ்சி பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 103,104 மற்றும் 156 | 110,000 | அரச சொத்துக்களுக்கான நட்டத்திற்கு பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களை குறிப்பாக இனங்கண்டு நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 371- 373 | 290,000 | செயல்நிமித்த உப கட்டுநிதி எல்லையினை விஞ்சி கட்டுநிதி பெற்றுக்கொள்ளல் |
| (v) | நிதிப்பிரமாணம் 371(2) | 774,885 | பதவிநிலைத் தரமற்ற உத்தியோகத்தர்களுக்கு செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்குதல் |

**(ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை**

| | | |
|---|---|---|
| 2008 யூன் 26 ஆந் திகதிய 114/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை | 338,006 | உத்தியோகபூர்வ வாகனத்திற்கு மேலதிகமாக குழாம் வாகனங்களின் பாவனை மற்றும் சாரதியின் பிரத்தியேக பாவனைக்காக மோட்டார் சைக்கிளொன்று வழங்கப்பட்டிருந்தமை. |

## 3.8 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 07 செலவின விடயங்களுக்காக நிதியீட்டம் 13 மற்றும் 17 இன் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 4,847,350,000 தொகையான நிதியேற்பாடுகளில் 4 சதவீதம் அல்லது ரூபா 208,098,995 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் நிதியேற்பாடுகளில் 96 சதவீதம் அல்லது ரூபா 4,639,251,005 தொகையான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்திய அரசினால் நேரடியாக இலங்கையின் இந்தியத் தூதரகத்திற்கு நிதிகளை வழங்குவதன் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் வீடமைப்பு திட்டத்திற்காக மீளாய்வாண்டின் அமைச்சின் செலவின விடயமொன்றின் கீழ் நிதியீட்டம் 13 மற்றும் 17 இன் மூலம் ரூபா 4,492 மில்லியன் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அந்த நிதியேற்பாட்டினை பயன்படுத்தாமையினால் முழு நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொன்றும் ரூபா 550,000 கிரயமாக நிர்மாணிக்கப்பட வேண்டிய 46,000 வீடுகளில் 42,839 வீடுகளின் பணிகள் முன்னைய ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளை பயன்படுத்தி நிறைவு செய்யப்பட்டிருந்தமை 2016 மே 19 ஆந் திகதி அமைச்சின் செயலாளரால் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ii) செலவின விடயமொன்றின் கீழ் வீடுகளை நிர்மாணிப்பதற்காக நிதியீட்டம் 13 மற்றும் 17 இன் கீழான விடயமொன்றிற்காக ரூபா 57 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமையால் அந்த மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(iii) கன்னிவெடி அபாயம் தொடர்பில் அறிவூட்டும் செயற்திட்டத்திற்காக (யுனிசெப்) நிதியீட்டம் 13 இன் மூலம் செலவின விடயமொன்றிற்காக ரூபா 904,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திடமிருந்து கட்டுநிதி கிடைக்காமையால் அந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) 03 செலவின விடயங்களுக்காக நிதியீட்டம் 13 மற்றும் 17 ஆகியவற்றின் மூலம் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 295,350,000 தொகையான நிதியேற்பாட்டின் பயன்பாடு தொடர்பில் 2015 செப்தெம்பர் 20 ஆந் திகதியில் உள்ளவாறு அதன் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பான தகவல்கள் அமைச்சின் செயலாளரால் சனாதிபதி செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அந்த தகவல்களின் பிரகாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 28 சதவீதமான ரூபா 82,400,000 தொகையின் பயன்பாட்டிற்கு குறித்த வீடுகளின் அத்திவாரமிடல் மற்றும் சுவர்களை பூர்த்தி செய்தல் வரையான குறைவான மட்டத்திலேயே அதன் செயன்முன்னேற்றம் காணப்பட்டதுடன் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பது அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் நிதியளிப்பு 13 மற்றும் 17 இன் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 4,847,350,000 தொகையான நிதியேற்பாடு உள்ளடங்கலாக அமைச்சிற்காக வீடமைப்பு மற்றும் பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்த மொத்த மூலதன நிதியேற்பாடான ரூபா 5,454,368,000 இற்கு உரிய நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் அறிக்கைகளை வரவழைத்தல், அவற்றின் செயன்முன்னேற்றத்தை பரிசோதனை செய்தல், அதற்கான நடைமுறைகளைப் பின்பற்றுதல் அல்லது அந்த செயற்திட்டத்தை மீளாய்வு செய்தல் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பனை அபிவிருத்தி சபையின் ஆராய்ச்சி நிறுவகத்தை மீள நிறுவுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் ரூபா 4,000,000 தொகையான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அந்த நிதியேற்பாடு இலக்கிடப்பட்ட பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கு தேவையான நடைமுறைகள் அமைச்சினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) அமைச்சிற்காக கட்டிடமொன்றை வாடகைக்கு எடுத்தல்

அமைச்சின் பயன்பாட்டிற்காக வெளிதரப்பினரிடமிருந்து கட்டிடமொன்று 2016 மே 10 ஆந் திகதி முதல் 2018 மே 09 ஆந் திகதி வரை வாடகைக்கு எடுப்பதற்காக 2016 ஏப்ரல் 11 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அதற்காக மாதாந்த வாடகை மதிப்பீடு ரூபா 4,200,000 செலுத்துவதற்கு இணங்கியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மதிப்பாய்வுக் குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டிருந்த ஆகக்குறைந்த விலையினை சமர்ப்பித்திருந்த மற்றும் இரண்டாவது குறைவான விலையினை சமர்ப்பித்திருந்த கட்டிடத்தைக் கருத்திற்கொள்ளாமல் மூன்றாவதாக ஆகக்குறைந்த விலையினை சமர்ப்பித்திருந்த கட்டிடம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அமைச்சின் செயலாளருக்காக இரண்டு பெறுகைகள் குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தன. மேற்குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பாய்வுக் குழுவின் பரிந்துரையினை முதலாவது பெறுகைகள் குழு

அங்கீகரித்திருந்ததுடன், பின்னர் நியமிக்கப்பட்ட பெறுகைகள் குழுவினால் இரண்டாவது குறைவான விலையினை சமர்ப்பித்திருந்த கட்டிடத்தினை ரூபா 4,200,000 தொகைக்கு வாடகைக்கு எடுப்பதற்கு பின்னர் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) கட்டிடத்தை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக அரச தலைமை மதிப்பீட்டாளரால் ஒரு கன அடிக்காக ரூபா 85 வீதம் ரூபா 3,000,000 இற்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட கட்டிடம் மதிப்பிடப்பட்டிருந்தது. கட்டிடம் ரூபா 3,000,000 இற்கு வழங்குவதற்காக உரிமையாளரின் ஒருங்கிணைப்பாடு வெளிப்படுத்தப்படாதுள்ளமையால், சந்தை வாடகை பெறுமதியின் அடிப்படையில் மதிப்பீடொன்றினை வழங்குமாறு அமைச்சின் செயலாளரின் 2016 சனவரி 25 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அரசாங்க தலைமை மதிப்பீட்டாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அரசின் பிரதான மதிப்பீட்டாளரால் இவ் விடயத்தினை சமநிலைக்கு கொண்டுவருவதற்காக வருடாந்த வாடகை ரூபா 4,200,000 இற்கு மதிப்பிடப்பட்டுள்ளதாக அவரின் 2016 பெப்ரவரி 01 ஆந் திகதிய பதிற் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

**(ஆ) போலியான பதிவேடுகளை சமர்ப்பித்து நிதி மோசடியில் ஈடுபடல்**

போலியான பற்றுச்சீட்டுக்கள் மற்றும் போலியான பதிவேடுகளை சமர்ப்பித்து ரூபா 592,108 தொகையினை மோசடி செய்தமை தொடர்பில் 2015 யூலை 24 ஆந் திகதிய LS/E/MTISED/2015/AQ01 ஆம் இலக்க கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களை ஆழமாக பரீட்சிப்பதற்காக அமைச்சின் செயலாளரால் மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அந்த குழுவின் அறிக்கை 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததெனினும், அதன் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) பனை அபிவிருத்தி சபைக்கு வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகள்**

பனை அபிவிருத்தி சபைக்கு 2015 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 60 மில்லியன் நிதியேற்பாடுகள் தொடர்பில் பரிசோதனை மேற்கொண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையினை சமர்ப்பிப்பதற்காக அமைச்சின் செயலாளரால் 2015 ஒக்தோபர் 12 ஆந் திகதி குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அந்த குழுவின் அறிக்கை 02 வாரங்களுக்குள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்புமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த அறிக்கை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.10 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 19 | 13 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 06 | 03 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 87 | 70 | 17 |
| (iv) | ஆரம்ப நிலை | 29 | 26 | 03 |
| (v) | ஏனையவை (அமைய /தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 04 | 04 | - |
| | மொத்தம் | 145 | 116 | 29 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியளவில் 29 வெற்றிடங்கள் நிலவிய போதிலும், 2015 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த சேமிப்பு தொடர்பில் பதவியணியில் வெற்றிடங்கள் நிலவுகின்றமை தாக்கமளித்திருக்கவில்லை.